**செய்தி வெளியீடு எண்: 04/2021** **நாள்: 19.12.2021**

**பத்திரிக்கைச் செய்தி**

## மெட்ரோ இரயில் நிலையங்கள் மற்றும் மெட்ரோ இரயில்களில் மெல்லிசை மற்றும் பறையாட்டம் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், தமிழ் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை கொண்டாடுவதன் ஒரு பகுதியாக, சென்னை முழுவதும் உள்ள பல இசைக் கலைஞர்கள் மற்றும் அமைப்புகளுடன் இணைந்து சென்னை மக்களுக்கு தமிழ் கலாச்சாரத்தின் இசை மற்றும் கலை நிகழ்ச்சிகளை வழங்கி வருகிறது. இதன் தொடர்ச்சியாக 18.12.2021 முதல் மெட்ரோ இரயில் நிலையங்கள் மற்றும் மெட்ரோ இரயில்களில் பல்சுவை கலை நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

இதன் ஒரு பகுதியாக சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், “ஆன் தி ஸ்டீரிட் ஆப் சென்னை” கலை குழுவுடன் இணைந்து இன்று 19.12.2021 (ஞாயிற்றுக்கிழமை) 13 மெட்ரோ இரயில் நிலையங்கள் (தெரு நிலை) மற்றும் மெட்ரோ இரயில்களில் மெல்லிசை கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் நிமிர்வு கலையகம் அமைப்புடன் இணைந்து இன்று 19.12.2021 (ஞாயிற்றுக்கிழமை) வடபழனி மெட்ரோ இரயில் நிலையத்தில் (தெரு நிலை) பறையாட்டம் கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

பொதுமக்கள் மற்றும் மெட்ரோ பயணிகள் அவர்களின் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருடன் இணைந்து இந்நிகழ்ச்சியினை கண்டு களித்தனர்.

கொரோனா வைரஸ் தொற்றை தடுப்பதற்காகவும் அனைத்து பயணிகளின் பாதுகாப்பான பயணத்திற்காகவும் மெட்ரோ இரயில் நிலையங்களில் நுழைவதற்கும் மெட்ரோ இரயில்களில் பயணிப்பதற்கும் அனைத்து பயணிகளும் கட்டாயம் சரியாக முகக்கவசம் அணிந்திருப்பதுடன் தனிமனித இடைவெளியைக் கடைபிடித்து பயணம் செய்து சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**வெளியீடு: இணை இயக்குநர் (மக்கள் தொடர்பு)**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை.**